இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண்கள் *521-522/2023*

(சிறப்பு அனுமதி மனு (உ) எண்கள் 14948-14949/2017-லிருந்து எழுகிறது)

ஏழுமலை (எ) வெங்கடேசன்
மற்றும் ஒருவர் ... மேல்முறையீட்டாளர்(கள்)

-எதிர்-

எம். கமலா மற்றும் பலர் முதலானோர் ... எதிர்மேல்முறையீட்டாளர்(கள்)

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. கே.எம். ஜோசப்:

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. திரு. செங்கழனி செட்டியார் என்பவர் ருக்மணி என்பவரை மணம்புரிந்தார். அத்திருமண உறவிலிருந்து திரு. சந்திரன் என்ற மகன் பிறந்தார். மேல்முறை-யீட்டாளர்கள் திரு. சந்திரனின் மகன்களாவர். செங்கழனி செட்டியார் திருமதி. குப்பம்மாள் என்பவரை மீண்டும் மணம்புரிந்தார். இரண்டாம் திருமணம் மூலம் செங்கழனி செட்டியாருக்கு 5 மகள்களும் ஒரு மகனும் பிறந்தனர். இவ்வழக்கின் வாதத்திற்குரிய பொருள் யாதெனில், செங்கழனி செட்டியாரின் இரண்டாவது திருமணத்திலிருந்து பிறந்துள்ள 6 குழந்தைகளில் இரண்டு குழந்தைகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ-அட்டவணை சொத்து தொடர்புடைய பாகப்பிரிவினைக்கான உரிமை வழக்காகும். பிரச்சினைக்குரிய சொத்தானது திரு. செங்கழனி செட்டியாரின் சுயசம்பாத்திய சொத்தாகும். மேற்படி சொத்து தொடர்பாக, மேல்முறையீட்டாளர்களின்

தந்தையான சந்திரன் விடுதலை ஆவணம் ஒன்றை நிறைவேற்றினார். 12.11.1975 தேதியிடப்பட்ட விடுதலை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

> 1975-ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 12-ஆம் நாளன்று நிறைவேற்றப்பட்ட விடுதலை ஆவணமானது சென்னை, மைலாப்பூர், மீர்சாபேட்டை, சாந்தா சாஉறிப் தெரு, எண் 19-இல் வசிக்கும் செங்கழனி செட்டியாரின் மகனான எஸ். சந்திரன் என்பவரால் (1) சென்னை, மைலாப்பூர், மீர்சாபேட்டை, வெங்கடாச்சல முதலி தெரு, எண் 144-இல் வசிக்கும் சிங்கார செட்டியாரின் மகனான சி. செங்கழனி செட்டியாருக்கும் (2) செங்கழனி செட்டியார் காப்பாளராக இருக்கும் அவரது 2 வயதுடைய இளவர் மகனான விநாயகமூர்த்திக்கும் ஆதரவாக நிறைவேற்றப்பட்டது. அது பின்வருமாறு:
>
> நான் முதல் மனைவியின் மகனாவேன். நான் தங்களுடன் இருக்கமுடியாததால், ரூ.10,000/- மதிப்புடைய தங்க நகை மற்றும் ரூ.5,000/- மதிப்புடைய பொருட்களின் அடைமானத்தை உரிமை மாற்றம் மூலம் பெற்றுக்கொண்டேன். இந்த நாளன்று, இந்த ஆவணத்தின் மூலம் கீழ்க்காணும் அட்டவணையில் மிகக் குறிப்பாக விவரிக்கப்பட்டுள்ளபடி, மணமதி கிராமத்தில் அமைந்துள்ள நமக்கு சொந்தமான வீட்டுமனைகள் தொடர்பாக எனது பங்கினை விடுவிக்கின்றேன். மேற்படி வீட்டுமனையின் மீதான அடைமானத் தொகையானது ரூ.10,500/-ம் தங்களால் தீர்வு செய்யப்படும்.

இதற்குபின்னர், நமக்கிடையே இரத்த உறவைத் தவிர வேறொன்றுமில்லை.

இந்தவகையில், நான் விடுதலை ஆவணத்தை நிறைவேற்றினேன்.

3. விதிவசத்தால், 9.12.1978 அன்று திரு. சந்திரன் இறந்துவிட்டார். 19.1.1988 அன்று செங்கழனி செட்டியார் இறந்துவிட்டார். செங்கழனி செட்டியாரின் இரண்டாம் மனைவியான திருமதி. குப்பம்மாள் 25.8.2005 அன்று இறந்துவிட்டார். ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போன்று செங்கழனி செட்டியாரின் இரண்டாம் திருமணத்தில் பிறந்துள்ள குழந்தைகளான உமா ரவிசந்திரன் மற்றும் வினாயகமூர்த்தி ஆகியோர் மு.வ. எண் 8173/2006-ஐ தாக்கல் செய்தனர். 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் செங்கழனி செட்டியாரின் இரண்டாம் திருமணத்திலிருந்து பிறந்த மற்ற மகள்களாவர். அதைத்தொடர்ந்து, மேல்முறையீட்டாளர்கள் 4 மற்றும் 5-ஆம் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டனர். அவ்வாறே 6-ஆம் பிரதிவாதியும் சேர்க்கப்பட்டார், அவரே செங்கழனி செட்டியாரின் இரண்டாவது திருமணத்தில் பிறந்த மரணமுற்ற மகளின் மகனாவார்.

4. மேல்முறையீட்டாளர்களை விலக்குக்கோரும் வாதிகளின் வழக்கானது, மேல்முறையீட்டாளர்களின் தந்தையால் நிறைவேற்றப்பட்டுள்ள விடுதலை ஆவணத்தின் அடிப்படையிலானது. ஆயினும், விடுதலை ஆவணமானது, சந்திரனின் தந்தையான செங்கழனி செட்டியார் உயிருடனிருக்கையில், 1975-ஆம் ஆண்டு நிறைவேற்றப் பட்டுள்ளது என்ற காரணத்தின்பேரில் பிரச்சினைக்குரிய விடுதலை ஆவணம் இல்லாநிலையது என்று விசாரணை நீதிமன்றத்தால் கண்டறியப்பட்டது. மேல்முறையீட்டாளர்கள், தங்களது தாத்தாவான செங்கழனி செட்டியாரின் சொத்தை மரபுரிமை மூலம் பெறுவதற்கு விடுதலை ஆவணம் ஒரு தடையாக இருக்காது என்று கண்டறியப்பட்டது. மேல்முறையீட்டாளர்கள் $^{2}/_{7}$ பங்கை மட்டுமே பெறுவதற்குரியவர்கள்

எனக் கண்டறியப்பட்டது. அதன்படி, மேல்முறையீட்டாளர்களுக்கு $^{2}/_{7}$ பங்குக்கான தீர்ப்பாணை வழங்கப்பட்டது. 'ஆ' அட்டவணை சொத்தைப் பொறுத்தவரையில், இவ்வுரிமை வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியதாயிற்று. வாதிகள், மே.வ. எண் 883/2009-ஐ தாக்கல் செய்தனர். 1, 3 மற்றும் 6-ஆம் பிரதிவாதிகள் மே.வ. எண் 718/2009-இல் மேல்முறையீடு ஒன்றைத் தாக்கல் செய்தனர். எதிர்ப்புக்குள்ளான உத்தரவு மூலம் உயர் நீதிமன்றம் இம்மேல்முறையீடுகளை அனுமதித்து, மேல்முறையீட்டாளர்கள், மரணமுற்ற செங்கழனி செட்டியாரின் சொத்தில் பங்கு எதனையும் கோருவதற்கு உரிமையுடையவர்கள் அல்லர் என்று கண்டறிந்தது. விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பாணையை நேர்மாறாக்குவதற்கான அடிப்படை வாதக்கூற்று, **குலாம் அபாஸ் -எதிர்- உறாஜி கயாம் அலி மற்றும் பலர், ஏ.ஐ.ஆர். 1973 எஸ்.சி. 554** என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தால் வகுத்துரைக்கப்பட்டுள்ள தீர்ப்புரையில் வழங்கப்பட்டுள்ளது. சுருக்கமாகக்கூறின், திரு. சந்திரன் தனது தந்தையிடம் மறுபயனைப் பெற்றுக்கொண்டு விடுதலை ஆவணத்தை நிறைவேற்றினார் என்ற கூற்றைப் பொறுத்தவரையில், அ-அட்டவணை சொத்தில் பங்கினைக் கோருவதற்கு மேல்முறையீட்டாளர்களுக்கு முரண்தடை ஏற்பட்டுள்ளது என்பதாகும். மேலும், இரண்டாவது வாதியின் மரணத்தை அறிந்த நீதிமன்றம், 1-ஆம் வாதி மற்றும் அவருடன் பிறந்தவர்களான 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் மட்டுமே 2-ஆம் வாதியின் பங்கை மரபுரிமையாகப் பெறுவதற்குரியவர்கள் என்று கண்டறிந்தது. அதாவது, வாதிகள், பிரதிவாதிகள் பி.1 முதல் பி.3 மற்றும் பி.6 ஆகியோர் அ-அட்டவணை சொத்தில் $^{1}/_{6}$ பங்கைப் பெறுவதற்குரியவர்கள் என்றும், 2-ஆம் வாதியின் மரணத்தை கருத்திற்கொண்டு பார்க்கையில், 1-ஆம் வாதியும், 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளும் $^{5}/_{24}$ பங்கினையும், 6-ஆம் பிரதிவாதி $^{4}/_{24}$ பங்கினையும்

பெறுவதற்குரியவர்கள் என்று கண்டறியப்பட்டது. அ-அட்டவணை சொத்தில் 4 மற்றும் 5-ஆம் பிரதிவாதிகளின் பங்கு மறுக்கப்பட்டதன்பேரிலேயே அவர்கள் இந்நீதிமன்றத்தின முன்புள்ளனர்.

5. மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. சித்தார்த் அய்யர், 1-ஆம் வாதிக்கான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. உமாஷங்கர் மற்றும் 2 மற்றும் 6-ஆம் பிரதிவாதிகளுக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. ஜெயந்த் முத் ராஜ் ஆகியோரின் வாதங்களைக் கேட்டோம்.

6. மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. சித்தார்த் அய்யர், (மேற்படி) **குலாம் அப்பாஸ்** என்ற வழக்கின் ஆதரவை நாடியதில் உயர் நீதிமன்றம் பிழைபுரிந்துள்ளது என்று வாதுரைத்தார். அவ்வழக்கானது முகமதிய சட்டத்தின் கீழ் எழுந்துள்ளது என்றும், 1956-ஆம் ஆண்டு, இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 8-இன் கீழ் முதல் வகுப்பு வாரிசுதாரர்களான மேல்முறையீட்டாளர்களின் பங்கை இழக்கச்செய்ய அத்தீர்ப்புரையில் வகுத்துரைக்கப்பட்டுள்ள கோட்பாட்டினை பயன்படுத்தமுடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். மேலும் அவர் குறிப்பிடுகையில், 1975-ஆம் ஆண்டு விடுதலை ஆவணம் நிறைவேற்றப்பட்டவேளையில், முதல் மேல்முறையீட்டாளருக்கு மூன்று வயதே இருந்தது என்பதாகும். மேலும் குறிப்பிடத்தக்கது யாதெனில், இரண்டாம் மேல்முறையீட்டாளர் பிறக்கவில்லை என்பதாகும். சொத்தானது, மேல்முறையீட்டாளர்களின் தாத்தாவின் தனிப்பட்ட சொத்தாக இருந்தாலும், மேல்முறையீட்டாளர்கள், செங்கழனி செட்டியாருக்கு முன்பு இறந்த மகனின் மகன்களாக இருப்பதாலும், அது சட்டப்படி பிரிவு 8-இன் கீழ் மேல்முறையீட்டாளர்களுக்கு இரக்கமுடன் அளிக்கப்பட்டுள்ள பங்காகும். சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 6 குறிப்பீடு செய்யப்பட்டது. விடுதலை ஆவணமானது,

1975-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டபோது, மேல்முறையீட்டாளரின் தந்தையான திரு. சந்திரனுக்கு எதிர்நோக்கு இறங்குரிமை மட்டுமே இருந்தது என்று அவர் சுட்டிக்காட்டினார். எதிர்காலத்தில் மரபுரிமையாகப் பெறும் எதிர்பார்ப்பு மட்டுமே சட்டப்படியான உரிமை மாற்றத்தின் கருப்பொருளாக அமையாது. எனவே, விசாரணை நீதிமன்றம் விடுதலை ஆவணத்தை முற்றிலும் செல்லாதது எனப் புறக்கணித்தது முற்றிலும் சரியே. வேறுவகையில் கூறினால் செங்கழனி செட்டியாரின் சொத்தின் மரபுரிமை 1988-ஆம் ஆண்டு தொடங்கியபோது, பிரச்சினைக்குரிய சொத்து செங்கழனி செட்டியாரின் பெயரில் இருந்தது, பிரிவு 8-இன் வரையறைகளின்படி, மேல்முறையீட்டாளர்களின் சட்டப்படியான பங்கினை மரபுரிமையாகப் பெறும் உரிமையை விடுதலை ஆவணத்தின் அடிப்படையில் கேள்விக்குள்ளாக்கமுடியாது. 1956-ஆம் ஆண்டு இந்து இளவர்நிலை மற்றும் காப்பாண்மைச் சட்டத்தின் பிரிவு 8-இன் கட்டளையை உயர் நீதிமன்றம் கவனிக்கத் தவறியது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். ஒருவேளை மேல்முறையீட்டாளர்களின் தந்தையான திரு. சந்திரன் அவரது தந்தையுடன் ஒப்பந்தம் செய்திருப்பதாக கருதப்படலாம் என்று வாதுரைக்கப்பட்டது. எனினும், பிரிவு 8-ஐ கருத்திற்கொண்டு பார்க்கையில், ஒப்பந்தமானது, மேல்முறையீட்டாளர்களை கட்டுப்படுத்துவதாக செயல்படாது. மேல்முறையீட்டாளர்களின் தாத்தா உயிலை நிறைவேற்றுவதிலிருந்தோ, மற்றவகையில் சொத்தை கையாளுவதிலிருந்தோ அவரை எதுவும் தடுக்கமுடியாது என்று அவர் மேலும் பணிந்துரைத்தார். திரு. சந்திரன் உயில் எழுதாமல் இறந்ததன் விளைவை அறிந்திருந்தும், மேல்முறையீட்டாளர்கள் சொத்தை மரபுரிமையாகப் பெறுவதைத் தடுக்கும்பொருட்டு அவர் சட்டப்படியான பாதுகாப்பு எதனையும் செய்யவில்லை. அவர்களது தந்தையான திரு. சந்திரன் மற்றும் தாத்தா முறையே

1978 மற்றும் 1988 ஆகிய ஆண்டுகளில் இறந்த தேதிகளின் அடிப்படையில், சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 43-இன் பொருளின்படி முரண்தடையூட்டு கோட்பாட்டினைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பில்லை என்று வாதுரைக்கப்பட்டது.

7. கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. ஜெயந்த் முத் ராஜ் மேல்முறையீட்டாளர்களுக்கு ஆதரவாக முன்னிலையானார். மேல்முறையீட்டாளர்களுக்கு ஆதரவாக செயல்பட்டது என்பது பின்னர் ஏற்பட்ட மாற்றம் என்று அவர் ஒப்புக்கொண்டார். அதாவது, முதலில் திரு. ஜெயந்த் முத் ராஜின் தரப்பினர்களாக இருந்த செங்கழனி செட்டியாரின் மகள்களில் ஒருவரும், 6-ஆம் பிரதிவாதியுமான (செங்கழனி செட்டியாருக்கு முன்னதாக இறந்த அவரது மகளின் மகன்) திரு. பாபுவும் மேல்முறையீட்டாளர்களின் உரிமைக் கோரிக்கையை எதிர்த்தனர். எனினும், மேல்முறையீட்டாளர்களின் பங்கைப் பொறுத்தவரையில், திரு. ஜெயந்த் முத் ராஜ் அவர்களின் தரப்பினர்களுக்கு ஆதரவாக பின்னிட்ட உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது. இது தெளிவாகவே அவரது தரப்பினர்களின் நிலைப்பாட்டை தலைகீழாக்கிய தவிர்க்கமுடியாத மாற்றத்தை விளக்குகின்றது. உயர் நீதிமன்றத்தால் சார்வுறப்பட்ட (மேற்படி) **குலாம் அப்பாஸ்** என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரைமீது உயர் நீதிமன்றம் சார்ந்துநின்றது; அதன் பொருண்மைகளின் அடிப்படையில் முரண்தடை கோட்பாடு பயன்படுத்தப்பட்டுள்ளது என்று திரு. ஜெயந்த் முத் ராஜ் வாதுரைத்தார். ஆயினும், இவ்வழக்கின் பொருண்மைகள் முரண்தடை கோட்பாட்டை உறுதிசெய்யவில்லை. **குலாம் அப்பாஸ்** என்ற வழக்கில் கூட்டு வாரிசுதாரர்கள் தடுக்கப்பட்டனர் என்று தீர்மானிக்க அவர்களின் நடத்தை இந்நீதிமன்றத்தால் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது என்று அவர் வாதிட்டார். மாறாக, இவ்வழக்கில் உறுதியான முரண்பாடு உள்ளதாக அவர்

வாதுரைத்தார். மேல்முறையீட்டாளர்களுக்கு எந்த நடத்தையும் குறிப்பிட்டுக் கூறப்படவில்லை. (மேற்படி) **குலாம் அப்பாஸ்** என்ற வழக்கிலுள்ள நிலைப்பாட்டினைப்போன்று, கூட்டு வாரிசுதாரர்களின் நடத்தையின் அடிப்படையிலான முரண்தடை கோட்பாட்டின் அடிப்படையில் செங்கழனி செட்டியாரின் பிள்ளைகள் வழக்கை மெய்ப்பித்திருக்கவில்லை. திரு. சந்திரனுக்கு முரண்தடை பொருந்தினால், முதல் வகுப்பு வாரிசுகளான (முன்னதாக இறந்த மகனின் குழந்தைகள்) மேல்முறையீட்டாளர்களின் உரிமையைப் பறிக்க அவர்களுக்கு எதிராக அதனை துணைகொள்ளமுடியுமா? என்பதான வினாவைப் பொறுத்தவரையில், வழக்குச் சொத்தானது செங்கழனி செட்டியாரின் தனிப்பட்ட சொத்து என்ற அடிப்படையில் கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் வழக்கை மேல்நடத்தியுள்ளார் என்பதில் ஐயமில்லை. (மேற்படி) **குலாம் அப்பாஸ்** என்ற வழக்கின் கோட்பாடு உயர் நீதிமன்றத்தால் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று முனைப்புடன் வாதிட்டார். அவர்களின் தாத்தா சொத்தைப் பங்கிடவில்லை; மேலும், மரபுரிமை சட்டத்தின் பிரிவு 8-இன் கட்டளைக்கிணங்க சொத்தை மரபுரிமைப்படி அளிக்க அவர் விரும்பினார் என்பதை இது காட்டுகிறது என்பதை இந்நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளதாக திரு. ஜெயந்த் முத் ராஜ் வாதிட்டார்.

8. இதற்குமாறாக, முதல் வாதி மற்றும் மற்ற எதிர்வாதிகளுக்கு ஆதரவாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர்கள் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையை ஆதரித்தனர். கற்றறிந்த வழக்குரைஞர்கள் விடுதலை ஆவணத்தின் வாசகங்களுக்கு எங்களது கவனத்தை ஈர்த்தனர். தரப்பினர்களின் உட்கருத்தை நீதிமன்றம் கருத்திற்கொள்ளவேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார். செங்கழனி செட்டியாருக்கு இரண்டாவது திருமணம் மூலமாக ஒரு மகன் இருந்தான். அவனுக்கு மனநிலை

சரியில்லை. தரப்பினர்கள் அந்த மகனின் நலனைப் பாதுகாக்க விரும்பினர். மகனின் சார்பாக மேல்முறையீட்டாளர்களின் தாத்தாவால் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டு விடுதலை ஆவணம் ஏன் நிறைவேற்றப்பட்டது? என்பதை இது விளக்குகிறது. திரு. சந்திரன் மறுபயனைப் பெற்றுக்கொண்டு, அவரது உரிமைகள் அனைத்தையும் கைவிட்டார் என்பதைச் சுட்டிக்காட்டுவதைத் தவிர, சொத்துக்கான மரபுரிமை குறித்து மேல்முறையீட்டாளர்கள் கோருவது சரியல்ல.

ஆய்வு

9. பிரச்சினைக்குரிய சொத்து, செங்கழனி செட்டியாரின் தனிப்பட்ட சொத்தாக அறியப்படுகிறது. அவர் 1988-ஆம் ஆண்டில் இறந்துவிட்டார். செங்கழனி செட்டியார் இருமுறை மணம்புரிந்துகொண்டார். அவரது முதல் திருமணத்தின் மூலம் திரு. சந்திரன் பிறந்தார். திரு. சந்திரன் 1978-ஆம் ஆண்டில் அவரது தந்தைக்கு முன்னதாக இறந்துவிட்டார். முன்னதாக இறந்த மகனின் பிள்ளைகளான மேல்முறையீட்டாளர்கள் பொதுவாக இவ்வழக்கில் விசாரணை நீதிமன்றத்தால் தீர்ப்பாணையிடப்பட்டபடி மரபுரிமையால் பங்கினைப் பெற்றுக்கொண்டனர். விடுதலை ஆவணத்தின் வாசகங்கள் திரு. சந்திரன் சொத்து தொடர்பான தனது பங்கினை விட்டுக்கொடுத்துள்ளார் எனத் தெரிவிக்கின்றன. திரு. சந்திரன் பெறுமானமுள்ள மறுபயனைப் பெற்றதன் அடிப்படையில் அவர் உரிமைத் துறப்பை செய்தார் என்பதும் தெளிவாகிறது. கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. ஜெயந்த் முத் ராஜ் விடுதலை ஆவணமானது "எங்களுக்கு" சொந்தமான சொத்து தொடர்புடையது என்று வாதுரைக்க முயன்றார். சொத்து, திரு. செங்கழனி செட்டியாரின் சுயசம்பாத்திய சொத்து என்று இரு நீதிமன்றங்களால் கண்டறியப்பட்டதன் அடிப்படையில் நாங்கள் வழக்கை மேல்நடத்த விரும்புகிறோம். அதில் எந்த மாற்றமும் இல்லை.

10. சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு *6*-ஆனது உரிமை மாற்றம் செய்யக்கூடிய சொத்தைக் குறித்து விவரிக்கிறது. இந்தச் சட்டத்தினால் அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதனாலும் பிறவாறு வகைசெய்யப்பட்டுள்ளதைத் தவிர, எவ்வகைப்பட்டதுமான சொத்து எதுவும் உரிமை மாற்றம் செய்யப்படலாம் என்று அது குறிப்பிடுகிறது. ஓர் உறுதிநிலை மரபுரிமையர், ஓர் அடைசொத்தினை வழியுரிமை வாயிலாகப் பெறுகிற வாய்ப்பு, ஒரு இரத்தத் தொடர்புடைய உறவினர் இறப்பதன்பேரில் ஓர் உறவினர் உயில்கொடை ஒன்றைப் பெறுகிற வாய்ப்பு அல்லது அதேபோன்ற தன்மையிலான பிற நிகழ்வு ஆகியவற்றை உரிமை மாற்றம் செய்ய இயலாது என்று பிரிவு *6(அ)* குறிப்பிடுகிறது. உயிரோடிருக்கும் நபருக்கு எவரும் மரபுரிமையராக இருப்பதில்லை. அதேபோன்று, ஒருவர் தனது உறவினர் இறந்ததன்பேரில் சட்டப்படி வாரிசுரிமைப்பெற்று, வாரிசாகிவிடுபவருக்கு சொத்துக்கான வாரிசுரிமைக்கு வாய்ப்பில்லாதவரையில், அதில் எந்த உரிமையும் இல்லை. திரு. சந்திரனின் தந்தையான திரு. செங்கழனி செட்டியார் உயிருடன் இருக்கையில், அவரது மகனான திரு. சந்திரனுக்கு முதன்மை எதிர்நோக்கு இறங்குரிமை இருந்துவந்தது. இந்து தனிப்பட்ட சொத்தினைப் பொறுத்தவரையில் ஒரு பங்குரிமையர் தனது பிறப்பினால் மட்டுமே கூட்டுக் குடும்பச் சொத்தில் உரிமையைப் பெறுவதுபோல் அல்லாமல், இதில் அத்தகைய எந்த உரிமையும் எழாது. ஆகவே, விடுதலை ஆவணமே திரு. சந்திரனின் உரிமைகளை அவரது தந்தைக்கு ஆதரவாகவோ, அவரது தந்தையின் இரண்டாம் திருமணத்தில் பிறந்த இளவர் மகனுக்கு ஆதரவாகவோ உரிமை மாற்றம் செய்ததன் பலனை ஏற்படுத்தாது என்பதில் ஐயமேதுமில்லை.

11. எனவே, விடுதலை ஆவணத்தை நிறைவேற்றுகையில் திரு. சந்திரனின் நடத்தையும், அதைவிட முக்கியமாக விடுதலை ஆவணம் நிறைவேற்றுவதற்கு மறுபயன் பெறுவதென்பதும் முரண்தடையை ஏற்படுத்துமா? என்பதும் கவனிக்கத்தக்கது. வழக்கின் நேர்மைநெறியைச் சுருக்கமாக கூறுவதெனில், திரு. சந்திரன் அவரது தந்தைக்குப் பிறகு உயிர் வாழ்ந்திருந்தால், நேர்மைநெறி முரண்தடை கோட்பாடு, அவரை ஓர் உரிமைக் கோரிக்கை செய்வதிலிருந்து தடுத்திருக்கக்கூடியதா? என்பதே இவ்வழக்காகும். மேல்முறையீட்டாளர்களின் கோருரிமையைப் பொறுத்தவரையில் அவ்வாறான முரண்தடை நிரூபிக்கப்பட்டால் திரு. சந்திரனுக்கு எதிராக முரண்தடை இருப்பதன் விளைவு என்ன? மேலும் இந்து இளவர்நிலை மற்றும் காப்பாண்மைச் சட்டத்தின் பிரிவு 8-இன் விளைவு என்ன? என்பதே அடுத்த கேள்வியாகும்.

12. நாம், வாதுரைகள் குறித்து விவாதிப்பதற்கு முன்பு *(மேற்படி)* **குலாம் அப்பாஸ்** என்ற வழக்கில் வகுத்துரைக்கப்பட்டுள்ள பொருண்மைகளைக் கூர்ந்தாராய்வது அவசியமாகிறது. மேற்படி வழக்கில் உள்ளடங்கியுள்ள பொருண்மைகள் பின்வருமாறு:

அவ்வழக்கில், முகமதியன் ஒருவர் 5 மகன்கள், ஒரு மகள் மற்றும் ஒரு விதவை மனைவி ஆகியோரை அவரது வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். அவரது மகன்கள் செல்வ வளமுடன் வாழ்ந்துவந்தனர். அவர்களின் தந்தையார் கடன்கள் வைத்திருந்தார். அவர்களின் தந்தையார் வாழ்க்கை வசதியில் உச்சக்கட்டத்தில் இருந்துவிட்டு, அவரது கடன்களின் காரணமாக சொத்து முழுவதையும் இழந்துவிட்டபோது, அவரது இரண்டு மகன்கள் முன்வந்து கடனைச்

செலுத்திவிட்டனர். எனினும் அதற்கான பிரதிபலன் அளிக்கவேண்டியதிருந்தது. ஆவணங்களிலுள்ள அவரது இரு மகன்களான வாதியும், நான்காவது பிரதிவாதியும், சொத்தில் எந்த உரிமைகளையும் வருங்காலத்தில் கோராமல் இருப்பதற்காக குறிப்பிட்ட அளவு பணமும், அசையாச் சொத்தினையும் பெற்றுக்கொண்டு ஒப்புகை செய்தனர். இது தொடர்பான வாசகங்கள் பின்வருமாறு:

> "நான், என்னுடைய பங்குக்கு சமமாக மேற்குறிப்பிட்டுள்ளபடி பொருட்களை எடுத்துக்கொண்டு, நான் என்னுடைய சுய-விருப்பத்தின்பேரில் இதனை எழுதியுள்ளேன். எனக்கு இதற்குப்பிறகு சொத்தில் எந்த உரிமையும் இல்லை; மேலும் நான் இச்சொத்துகளில் எவற்றையாவது வருங்காலத்தில் கோரினால் இந்த ஆவணத்தின்படி அதைத் தவறெனக் காட்டவேண்டும். இச்சொத்துகளில் எவற்றையும் என்னுடைய தந்தையார் என்னுடைய மற்ற சகோதரர்களுக்கு கொடுப்பதற்கு எனக்கு எந்த ஆட்சேபணையுமில்லை....."

13. ஏ.ஐ.ஆர். 1976 அலகாபாத் 573-இல் அலகாபாத் உயர் நீதிமன்றத்தால் எடுக்கப்பட்ட கருத்தை அங்கீகரித்தது. நீதிமன்றம் கண்டறிந்ததாவது:

> "....ஒரு கருத்துரையாக தெரிவிக்கப்பட்டிருந்தாலும் சட்டப்படி பயனற்ற ஓர் உரிமை மாற்றமான எதிர்நோக்கு உரிமையைத் துறத்தல் என்பது இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 23-ஆல் அகற்றப்பட்டுள்ளது என்ற மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் கருத்துடன் நாங்கள் உடன்பட இயலவில்லை என்பதை

தக்க மரியாதையுடன் தெரிவித்துக்கொள்கிறோம். ஓர் உரிமை மாற்றமாக அது செல்லுபடியற்றது என்பதாலேயே ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 23-இன் மீது சார்ந்துநிற்கத் தேவையில்லை. சொத்தின் "உரிமை மாற்றம்" இல்லையென்றாலே அது சரியான நிலைப்பாடாகும்; ஆனால் வருங்காலத்தில் மட்டுமே செயற்படக்கூடிய ஒரு சாதாரண ஒப்பந்தம், உடனடியாக உரிமை மாற்றத்தைக் கொண்டுவருவதைக் குறித்து நிச்சயமாகக் கருத்திற்கொள்ளவில்லை; இதுவே முஸ்லீம் சட்டவிதியை சட்டப்படி செல்லாததாக்குவதாகும். உரிமை மாற்றம் அல்லது ஒப்பந்தம் எதனையும் தவிர, உரிமை துறப்பும், பெறுமானமுள்ள மறுபயனைப் பெற்றுக்கொள்ளுதலும் உள்ளதாகக் கருதப்படும் ஆவணங்களிலுள்ள விளம்புகைகள், பல ஆண்டுகளாக உள்ள ஒரு நடைமுறையின் பகுதிகளாக இருக்கமுடியாதா? எனும் உண்மையான வினாவினை முழுமையாக எடுத்துக்கொண்டால், அது சொத்துரிமை உள்ளபடியாக நடைமுறையிலிருந்துவந்தபோது அவ்வுரிமையை வெற்றிகரமாக உறுதிப்படுத்துவதன் மீது தடை ஒன்றை உருவாக்கியது. ஒரு நேர்மையான முரண்தடையின் கூறுகள் நிலைநாட்டப்படுமென்றால் அது பிறவாறு இருக்கின்ற உரிமைகளின் உறுதிப்பாட்டைத் தடுக்கின்ற ஒரு சான்று விதியாக செயல்படுகிறது.

7. சர் ரோலண்ட் வில்சன் தனது "ஆங்கிலோ முகமதியன் சட்டம்" (பக்கம் 260, பத்தி 208)-இல் கூறியிருக்கும் நிலைப்பாடாவது:

"மிகப் பரவலாக உள்ள இந்து சட்டப்படி தந்தை மற்றும் மகனின் கூட்டுரிமை குறித்து பொதுவாக அறிந்துள்ள அந்த வாசகர்களுக்காக, ரோமன் மற்றும் ஆங்கில சட்டத்தில் உள்ளவாறு, முகமதியச் சட்டத்தில் ..... உயிரோடிருக்கும் நபருக்கு எவரும் மரபுரிமையாக இருப்பதில்லை என்பதை ஒருவேளை வெளிப்படையாகக் கூறுவது விரும்பத்தக்கதாக இருக்கலாம். உறுதிநிலையான அல்லது தற்செயலான வாரிசு, உடைமையிலுள்ள உரிமையாளரால் செய்யப்படும் விற்பனை அல்லது கொடை எதனையும் ஆட்சேபிக்க இயலுமாதலால், அவருக்கு அத்தகைய பின்னடை உரிமையில்லை; காண்க: அப்துல் விதித், எல்.பி. 12 ஐ.ஏ. 91 மற்றும் 11 கல்கத்தா 597 (1885), இது உறசன் அலி, 11 அலகாபாத் 456, (1889)-இல் பின்பற்றப்பட்டது. இதற்கு மாறானதும் உண்மையாகும். எதிர்நோக்கு வாரிசால், தனது மூதாதையரின் ஆயுட்காலத்தில் செய்யும் உரிமைத்துறப்பு செல்லாது அல்லது மரபுரிமையாக அடைந்த பிறகு அது அவருக்கு கட்டாயமாக அளிக்கத்தக்கதாகும்."

இது சட்டப்படி ஒரு சரியான கூற்றாகும், ஏனெனில் வெறும் மரபுரிமையாகப் பெறுவதை எதிர்நோக்கி உரிமையைத் துறப்பதால்,

எதிர்காலத்தில் எதிர்நோக்கு வாரிசின் நடத்தையைக் கட்டுப்படுத்த இயலாது. ஆனால் எதிர்நோக்கு வாரிசு மறுபயனைப் பெற்று, மேற்கொண்டு தானே, உரிமையாளர் தனது சொத்தை உயிரோடிருப்பவர்களுக்கு உடைமாற்றம் செய்யாமலிருப்பதற்கு அவரை தவறாக வழிநடத்தும்படியாக நடந்துகொள்வாரெனில், மறுப்புக்கிடமின்றி அவரது உரிமை அவரிடத்தில் அடைவுறுகிறபோது, அதனை நிலைநிறுத்துவதிலிருந்து தடுத்துவிட இயலும். அதாவது முரண்தடை கோட்பாடு இக்கூற்றால் தொடப்படாமல் இருக்கிறது."

(வலியுறுத்தப்பட்டுள்ளது)

14. சொத்து அதாவது 'அ' அட்டவணை சொத்து திரு. சந்திரனின் மூதாதையர் சொத்து அல்ல. திரு. சந்திரனின் தந்தையார் உயில் எழுதாமல் இறந்ததால்தான் அவர் அதன்மீதான உரிமைகளைப் பெற்றார். ஆதலால் அவர்தான் உறுதிநிலை வாரிசு ஆவார். உறுதிநிலை வாரிசான ஒருவரால் செய்யப்படும் உரிமை மாற்றம் எதிர்நோக்கு இறங்குரிமையாதலால், அது ஏதேனும் உரிமையை மாற்றளிப்பதற்கு திறனற்றதாகும். விடுதலை ஆவணம் நிறைவேற்றுவதனாலேயே அதாவது இவ்வழக்கின் சங்கதிகளின்படி உரிமை மாற்றம் ஏதும் நிகழவில்லை. இதற்கான காரணம் என்னவென்றால், மேல்முறையீட்டாளர்களின் தந்தையாரான உரிமை மாற்றம் செய்தவர், மாற்றஞ்செய்யக்கூடிய அல்லது உரிமைத்துறக்கக்கூடிய எந்த உரிமையையும் பெற்றிருக்கவேயில்லை என்பதேயாகும். எனினும், அவரது உரிமையைத் தடுக்கமுடியும் என்பதாக அவரது நடத்தை இருக்குமெனில், விடுதலை ஆவணத்தை நிறைவேற்றுவது அவரது உரிமையைப் பாதிக்கக்கூடும்; ஆகவே

மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. சித்தார்த் அய்யர் அவர்களின் மற்ற வாதங்களில் நற்கூறு இருப்பதாக நாங்கள் அறிந்தாலன்றி, மேல்முறையீட்டாளர்களின் கோரிக்கையின்மீது அவை நீக்கவியலா ஐயத்தை பதிக்கக்கூடும்.

15. மேல்முறையீட்டாளரின் தாத்தா, விடுதலை ஆவணத்தின்பேரில் செயல்பட்டார் என்பதற்கும், அவர் விடுதலை ஆவணத்தின் அடிப்படையில் ஆவணம் ஏதும் நிறைவேற்றவில்லை என்பதற்கும் சான்று ஏதுமில்லை என்ற மேல்முறையீட்டாளர்கள் மற்றும் திரு. ஜெயந்த் முத் ராஜ் அவர்களின் வாதம் எங்களின் கவனத்தை ஈர்க்கவில்லை. திரு. செங்கழனி செட்டியார் இருமுறை மணம்புரிந்துகொண்டார். முதல் மனைவி மூலம் மேல்முறையீட்டாளர்களின் தந்தை பிறந்தார். அதன்பிறகு, அவர் மீண்டும் மணம்புரிந்துகொண்டார். இரண்டாவது திருமணத்திற்குப் பிறகு, அத்திருமண பந்தத்திலிருந்து குழந்தைகள் பிறந்த பிறகுதான் விடுதலை ஆவணம் 1975-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 12-ஆம் நாள் நிறைவேற்றப்படும்படியானது. இரண்டாவது திருமணத்தின் மூலம் பிறந்த ஒரு மகன் தற்செயலாக நோய்வாய்ப்பட்டதாகத் தெரிகிறது; அவரது சார்பாக மேல்முறையீட்டாளர்களின் தந்தை விடுதலை ஆவணத்தை நிறைவேற்றினார். இரண்டாவது திருமணத்தின் மூலம் பிறந்த மகனின் உரிமையைப் பாதுகாப்பதே செங்கழனி செட்டியாரின் நோக்கமாக இருந்துவந்ததாகத் தெரிகிறது. அவர் இரண்டாவது திருமணத்தின் கீழ் உருவான அவரது உரிமையைப் பாதுகாக்க விரும்பினார்; அதற்காக முதல் திருமணம் மூலம் பிறந்த மகனான மேல்முறையீட்டாளரின் தந்தையாருக்கு குறிப்பிட்ட பெறுமானமுள்ள மறுபயன்

கொடுக்கப்பட்டது; இது, திரு. சந்திரன் பிரச்சினைக்குரிய சொத்து தொடர்பான தனது உரிமைகள் அனைத்தையும் துறப்பதற்கு ஏதுவாக இருந்தது. இதற்குப்பிறகு அவர்களுக்கு இரத்த சம்பந்தமான உறவைத் தவிர வேறெந்த தொடர்பும் இல்லை. சொத்து தொடர்பான திரு. சந்திரனின் கோரிக்கை எதனையும் மறுப்பதே திரு. செட்டியாரின் நோக்கமாக இருந்தது என்பதைத் தெரிவிப்பதாகவே 'விடுதலை ஆவணத்தில்' உள்ள வாசகங்கள் இருந்ததாகத் தெரிகிறது. அவர், அவரது குறிக்கோளை அடைந்துவிட்டதாக தெளிவுபட எண்ணினார், மேலும், சட்டப்படி *(மேற்படி)* **குலாம் அப்பாஸ்** என்ற வழக்கின் கோட்பாடு பயன்படுத்தப்பட்டு, திரு. சந்தரன் அவரது தந்தையாருக்கு முன் இறக்கவில்லையென்றால் தரப்பினர்களின் திட்டப்படியே அனைத்தும் நிகழ்ந்திருக்கக்கூடும்.

16. திரு. சந்திரன் அவரது தந்தைக்குப்பின் உயிருடன் இருந்து, அவரது தந்தையின் சொத்து உயில் எழுதப்படாமல் மரபுரிமைப்படி அவரை அடைந்து விடுதலை ஆவணம் நிறைவேற்றிய அந்த நடத்தையே சட்டப்படியான உரிமை மாற்றத்தில் முடியாதிருந்ததாக ஊகித்தால், மறுபயனைப் பெற்றுக்கொண்ட திரு. சந்திரனின் நடத்தையை அது தடுத்திருக்கக்கூடும். திரு. செட்டியார் உயிலின் மூலம் எந்த ஆவணத்தையும் நிறைவேற்றவில்லை என்ற சங்கதியே, திரு. சந்திரன், பிரச்சினைக்குரிய சொத்திலிருந்து மரபுரிமை எனும் கிளை வெட்டப்பட்டிருப்பதாக எடுத்துரைத்ததன் அடிப்படையில் அவர் நடவடிக்கை மேற்கொண்டார் என்பதைக் காட்டுகிறது.

17. மேல்முறையீட்டாளர்களான திரு. சந்திரனின் பிள்ளைகள் விடுதலை ஆவணம் எதுவும் ஏன் நிறைவேற்றவில்லை என்பது குறித்து வாதிக்கான கற்றறிந்த வழக்குரைஞரை நாங்கள் வினவியபோது, செங்கழனி செட்டியார் தான்

புரிந்துகொண்ட சட்டத்தின்பேரில் தெள்ளத்தெளிவாக நடவடிக்கை மேற்கொண்டார் என வாதிட்டு கற்றறிந்த வழக்குரைஞர் பதிலளித்தார்.

இந்து இளவர்நிலை மற்றும் காப்பாண்மைச் சட்டத்தின் பிரிவு 8-இன் செயல்விளைவு:

18. இந்து இளவர்நிலை மற்றும் காப்பாண்மைச் சட்டம், 1956 (இதில் இதற்குப்பிறகு '1956-ஆம் ஆண்டு சட்டம் எனக் குறிப்பிடப்படும்), பிரிவு 8(1), (2) மற்றும் (3) மற்றவற்றுக்கிடையே கூறுவதாவது:

"8. இயல்பு காப்பாளரின் அதிகாரங்கள்.-

(1) ஓர் இந்து இளவரின் இயல்பு காப்பாளர், இந்தப் பிரிவின் வகையங்களுக்குட்பட்டு, இளவரின் நலனுக்கு வேண்டிய அல்லது இளவரின் உரிமைச் சொத்தினைக் கைவரப்பெறவும், பாதுகாக்கவும் அல்லது பயனுடையதாக்கவும், தேவையான அல்லது தகுந்த உரிய செயல்களைப் புரிவதற்கு அதிகாரமுடையவர் ஆவார்; ஆனால் காப்பாளர் எந்நேர்விலும், ஒப்பந்தம் வாயிலாக இளவரைத் தனிமுறையில் கட்டுப்படுத்த இயலாது.

(2) இயல்பு காப்பாளர், நீதிமன்றத்தின் முன்அனுமதியின்றி,-

(அ) இளவரின் அசையாச் சொத்தின் பகுதி எதனையும் அடைமானம் வைத்தலோ, பற்றுப் பொறுப்புக்குட்படுத்தலோ, விற்பனை, கொடை, பரிமாற்றம் அல்லது பிறவகை உரிமை மாற்றம் செய்தலோ ஆகாது; அல்லது

(ஆ) அத்தகைய சொத்தின் பகுதி எதனையும் ஐந்தாண்டுகளுக்கு மேற்படும் ஒரு காலவரைக்கு அல்லது இளவர் உரிமை வயது அடையும் தேதி கடந்து ஓராண்டுக்கு மேற்படும் ஒரு காலவரைக்கு குத்தகைக்கு விடுதல் ஆகாது.

(3) உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2)-ஐ மீறுகிறவகையில் இயல்பு காப்பாளர் ஒருவரால் அசையாச் சொத்து எதுவும் தீர்வு செய்யப்படுமாயின், அது இளவரோ அவர் மூலம் உரிமை கோரும் ஒருவரோ எடுக்கும் நடவடிக்கையால் தவிர்தகு தீர்வாகும்."

19. மேல்முறையீட்டாளர்கள், ஒப்பந்தம் வாயிலாக இளவரைத் தனிமுறையில் கட்டுப்படுத்துகின்ற ஓர் இந்து இளவரின் இயல்பு காப்பாளர் மீதான தடையின்பேரில் சார்ந்திருக்கின்றனர். மேற்படி தடையைக் கருத்திற்கொண்டு, (மேற்படி) **குலாம் அப்பாஸ்** என்ற வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள கோட்பாடு பொருந்தாது என வாதிடப்பட்டுள்ளது. இது ஒரு வாதுரையே என்றாலும் இது பிரிவு 8-இன் முறையான பொருள்விளக்கத்தின்பேரில் போதுமானதென்று ஏற்றுக்கொள்ளப்படாது என்றே நாங்கள் கருதுகிறோம்.

20. ஒரு சிறுவனை அல்லது ஒரு திருமணமாகாத பெண்ணைப் பொறுத்தவரையில், தந்தையாரும், அவருக்குப்பின் தாயாரும், அந்த இளவருக்கும் அதோடுங்கூட அந்த இளவரின் சொத்துக்கும் இயல்பு காப்பாளர்களாக இருத்தல் வேண்டும் என 1956-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 6 மற்றவற்றுக்கிடையில் விளம்புகிறது. எனினும், கூட்டுக் குடும்பச் சொத்தில் இளவருக்கு உள்ள

பிரிக்கப்படாத பாத்தியதை, இளவரின் சொத்தில் சேர்க்கப்படாது. இதற்குப்பின், இயல்பு காப்பாளரின் அதிகாரங்கள் குறித்து பிரிவு 8 விரிவாகக் கருத்துரைக்கிறது. ஓர் இயல்புக் காப்பாளரின் அதிகாரங்கள் அதாவது ஒரு நபருடனோ அல்லது இளவரின் சொத்துடனோ அல்லது இந்த இரண்டுடனோ அது தொடர்புடையதாக இருக்கலாம். ஓர் இயல்புக் காப்பாளர், இளவரின் நலனுக்கு வேண்டிய அல்லது இளவரின் உரிமைச் சொத்தினைக் கைவரப்பெறவும், பாதுகாக்கவும் அல்லது பயனுடையதாக்கவும் தேவையான அல்லது தகுந்த உரிய செயல்களைப் புரிவதற்கு அதிகாரமுடையவராவார் என பிரிவு 8 மற்றவற்றுக்கிடையில் கருத்துரைக்கிறது. இதற்குப்பின்தான் சட்டமியற்றுபவர், ஒப்பந்தம் வாயிலாக இளவரைத் தனித்தமுறையில் கட்டுப்படுத்துவதிலிருந்து காப்பாளரைத் தடைசெய்துள்ளார். சுருக்கமாக, பிரச்சினைக்குரிய சொற்களுக்கு நாம் பொருள்கொள்ளும்பொருட்டு, ஒரு குறிப்பிட்ட சொத்துக்கு உரிமையானவரான உயிருடனிருக்கும் இளவரால் அந்தப் பின்புலம் குறித்து குறிப்பிடப்படவேண்டும். இளவரின் சொத்தைப் பொறுத்தவரையில், இயல்புக் காப்பாளர்கள் ஒப்பந்தம் ஒன்று செய்துகொண்டுள்ளதால், ஓர் ஒப்பந்தம் வாயிலாக இளவரைத் தனித்தமுறையில் கட்டுப்படுத்துகின்ற இயல்பு காப்பாளர் மீது தடைவிதிக்க வேண்டுவதற்கு இளவருக்கு வாய்ப்பிருக்கலாம்.

21. இந்த வழக்கின் சங்கதிகளின்படி, மேல்முறையீட்டாளர்களின் வழக்கைக் குறிப்பிடலாம். திரு. சந்திரனுக்கும் அவருடைய தந்தையாருக்குமே வழக்குரை அட்டவணைச் சொத்தில் உரிமையேதுமில்லை. இது திரு. செங்கழனி செட்டியாரின் தனிச்சொத்து எனும் காரணத்திற்காகத்தான் திரு. சந்திரனுக்கு பிறப்புவழி உரிமையும் இல்லை. சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 6(அ)-இன் பொருளின்படி எதிர்நோக்கு இறங்குரிமை என எது விவரிக்கப்பட்டுள்ளதோ, அதை

மட்டுமே அவர் பெற்றிருந்தார். மேல்முறையீட்டாளர்கள் வழக்குரை அட்டவணைச் சொத்தில் அவர்களின் பிறப்பின்போதோ அல்லது அவர்களின் தந்தையாரின் இறப்பின்போதோ அல்லது 1988-இல் அவர்களின் தாத்தா திரு. செங்கழனி செட்டியாரின் இறப்பின்போதோ தனிப்பட்ட உரிமையேதும் கொண்டிருக்கவில்லை என்பதும் அவர்களின் வழக்கல்ல. இந்து மரபுரிமைச் சட்டத்தின் பொருளின்படி, திரு. செங்கழனி செட்டியாரின் இறப்பின்பேரில் அச்சொத்தைத் தனிப்பட்ட சொத்தாக கருதுவதன் மூலம்தான் அவர்கள் மிகவும் முன்னதாகவே கோரிய உரிமையை எழுப்பமுடியும். ஆகவே '1956-ஆம் ஆண்டு சட்டத்தின்' பிரிவு 8-இன் பொருளின்படி, ஓர் ஒப்பந்தமாக 1975-ஆம் ஆண்டில் அவர்களின் தந்தையார் திரு. சந்திரனால் நிறைவேற்றப்பட்ட விடுதலை ஆவணத்தை நாங்கள் புறந்தள்ள இயலவில்லை.

22. திரு. செங்கழனி செட்டியார் 1988-ஆம் ஆண்டில் இறந்துவிட்டபோது அவரின் சொத்துக்கு மரபுரிமை வாய்ப்பிருக்கிறபோது மேல்முறையீட்டாளர்கள் தனி உரிமையைக் கொண்டிருப்பர் என்னும் மேல்முறையீட்டாளர்களின் வாதத்தைப் பொறுத்தவரையில், மேல்முறையீட்டாளர்கள், தந்தைக்குமுன் 9.12.1978 அன்று மரணமடைந்தவரான திரு. சந்திரனின் குழந்தைகளாவர் என்ற சங்கதியைக் கருத்திற்கொண்டு, மேற்படி வாதத்தில் எந்த நற்கூறும் இல்லை என நாங்கள் கருதுகிறோம். இந்து மரபுரிமைச் சட்டத்தின் பிரிவு 8(அ)-இன் கீழ் உயில் எழுதிவைக்காமல் இறக்கும் ஓர் இந்து ஆணின் சொத்து முதலில் அட்டவணையின் முதல் வகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உறவினர்களாயிருக்கின்ற வாரிசுகளுக்கு மரபுப்படி வந்தடையும் என்பது உண்மை. முன்னதாக இறக்கும் மகனின் மகன் முதல் வகுப்பின்படியான வாரிசு ஆவார் என்பதும் உண்மை. ஆகவே, திரு. செங்கழனி செட்டியார் உயில் எழுதாமல் இறந்துவிட்டதால், முன்னதாக இறந்துபோன மகனின்

பிள்ளைகளான மேல்முறையீட்டாளர்களுக்கு ஆதரவாக ஓர் உரிமை உருவாக்கப்பட்டது என வாதிடமுடியும். முரண்தடை எதைக்குறித்து கொண்டுவரப்படுகிறது என்றால், அது உரிமையை நிலைநிறுத்துவதிலிருந்து ஒரு தரப்பினரை தடுத்துக் கொண்டிருக்கிறது என்றாலும், முரண்தடையின்பொருட்டு அவர் சொத்துடையவராக இருந்திருக்கக்கூடும். இது தொடர்பாக, நாம் ஸ்பென்சர் போவர் மற்றும் டர்னரின் படைப்பான 'மரபுரிமை ஏற்பவரின் இறப்பு அல்லது இயலாமை' (பக்கங்கள் 125-126) என்ற தலைப்பின் கீழான பின்வரும் விவாதத்தைக் குறிப்பிடலாம்:

"மரபுரிமை ஏற்பவரின் இறப்பு அல்லது இயலாமை:

128. முரண்தடை என்ற பிரச்சினை எழுப்பப்படுகிற வழக்கு நடவடிக்கைகளின்போது மரபுரிமை ஏற்பவரின் இறப்பு அல்லது முழுமையான அல்லது பகுதி இயலாமை (நொடிப்புநிலை, குழந்தைப்பருவம், பித்துநிலை, பாதுகாப்பிடம் ஆகியவற்றின் காரணமாக இருப்பின் அல்லது பிறவகையாக இருப்பின்), ஓர் ஒப்பந்தத்தைத் தவிர்ப்பதற்கான வழக்கு நடவடிக்கைகளுக்குரிய அந்த மரபுரிமை ஏற்பவரின் பொறுப்புரிமை, மரபுரிமை ஏற்பினால் வந்தடைவதால், முரண்தடைக்குரிய பொறுப்புரிமை, பொதுப்படையாகக் கூறினால் அதே விதிகளுக்கிணங்க மற்றும் அதே நிபந்தனைகளுக்குட்பட்டு அதே நபர்களுக்கு மரபுப்படி வந்தடைகிறது அல்லது உரிமை மாற்றப்படுகிறது.

மரபுரிமை ஏற்பு நாளுக்கும், முரண்தடை எழுப்பும் நாளுக்கும் இடையே மரபுரிமை ஏற்பவர் இறந்துவிடுகிறவிடத்து,

மரபுரிமை ஏற்பவர், முரண்தடை தொடர்பான அனைத்து பொறுப்புகளையும் கொண்டிருந்து, அவற்றை மரபுரிமையாக பெற்றிருந்திருக்கக்கூடும் என்றால் அந்த அளவுக்கு நிறைவேற்றாளர் அல்லது நிருவாகி அல்லது (நிலத்தின் உரிமைமூலம் மற்றும் சொத்துரிமைகளைப் பொறுத்து) இறந்துபோன மரபுரிமை ஏற்பவரின் வாரிசு அல்லது உயில்வழி அளிப்பவர்) மரபுரிமை ஏற்பால் கட்டுப்படுகிறார், அவரது இறப்பு நாளில் அந்த மரபுரிமை ஏற்பவர் உட்படுவது...."

23. எங்களால் கண்டறியப்பட்டவாறு, தனது நடத்தையால் முரண்தடையிலிருக்கும் மேல்முறையீட்டாளர்களின் தந்தையார் இந்து மரபுரிமைச் சட்டத்தின் பிரிவு 8(அ)-இல் விளம்புகை செய்யப்பட்ட உரிமையின் மூலாதாரம் அல்லது மூலக்காரணம் ஆவார் என்பது கவனத்திற்கொள்ளப்படும். அதாவது, திரு. சந்திரனுக்கும், மேல்முறையீட்டாளர்களுக்கும் இடையேயான உறவுமுறையின் அடிப்படையிலேயே மேல்முறையீட்டாளர்களிடம் உரிமை வந்தடைவதற்கு இந்து மரபுரிமைச் சட்டத்தின் பிரிவு 8(அ)-இன் கீழான உரிமை கருத்துரைக்கிறது என்பதாகும். ஆகவே இந்து மரபுரிமை சட்டத்தின் பிரிவு 8(அ)-இன் அடிப்படையில் முரண்தடை கோட்பாட்டின் செயல்பாட்டிலிருந்து காப்புரிமை கோரும்நிலையில் மேல்முறையீட்டாளர்களும் இல்லை என நாங்கள் கருதுகிறோம். (மேற்படி) **குலாம் அப்பாஸ்** என்ற வழக்கின் கோட்பாடு பொருந்துமெனில், திரு. சந்திரனால் எது விடுவிக்கப்படவேண்டுமென்று கருதப்பட்டதோ, அது பெறுமானமுள்ள மறுபயனுக்காக அவரது உரிமைகளை மாற்றஞ்செய்வதில்/உரிமை துறப்பதிலான அவரது நடத்தை எதிர்நோக்கு இறங்குரிமை அல்லது எதிர்நோக்குதல் மட்டுமே

என்ற சங்கதி ஒரு முரண்தடையை எழுப்பக்கூடியதாகும். முரண்தடையின் செயற்விளைவினை, எவருடைய நடத்தை முரண்தடையை உருவாக்கியதோ, அந்த நபர் மூலமாக உரிமைகோரும் நபர்களால் தடுத்து விலக்கிவிடமுடியாது. மேலும் மதத்தின் அடிப்படையிலான ஒரு வேறுபாட்டை எட்டும் முயற்சியில் நற்கூறே இல்லையென நாங்கள் அறிகிறோம். முரண்தடை கோட்பாடு, அத்தகைய வேறுபாடின்றி பயன்படுத்தப்படுகிறது.

24. மேற்கொண்டு விவாதிக்கப்படவேண்டிய ஒரே வாதம் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. ஜெயந்த் முத் ராஜ் அவர்களால் எழுப்பப்பட்டுள்ளதாகும். *(மேற்படி)* **குலாம் அப்பாஸ்** என்ற வழக்கின் கோட்பாடு, பொருண்மைசார் கருப்பொருளின்படி இல்லாதிருக்கலாம் எனக் கூறுவதற்கு அவர் ஒரு முயற்சி மேற்கொண்டார். மேற்படி வழக்கில், சகோதரர்கள் ஒரு பயனைப் பெற்றுக்கொண்டபின் உரிமைகளை விட்டுக்கொடுத்தனர் எனக் கண்டறியப்பட்ட அச்சமயத்தில் அவர்கள் அந்த உரிமைகளைக் கொண்டிருக்கவில்லை என்பது அவரது வழக்காகும். எனினும் இவ்வழக்கின் நிலை அதேமாதிரியானதல்ல. இவ்வாதம், சங்கதிகளைப் புறந்தள்ளுகிறது என்பது எங்களுடைய கருத்தாகும். சொத்தைப் பொறுத்தவரையில் திரு. சந்திரன் பெறுமானமுள்ள மறுபயனைப் பெற்றுவிட்டதால், அவரது கோரிக்கை எதுவாயினும் அதுகுறித்து அவரது தந்தையாரான திரு. செங்கழனி செட்டியார், எதிர்பார்த்து, கவலைப்படாமல் சொத்தை சுதந்திரமாகக் கையாண்டு, அதன் அடிப்படையில் அவர் நடவடிக்கை எடுக்க அனுமதித்திருப்பதால், திரு. சந்திரனால் பெறப்பட்ட மறுபயனைத் தொடர்ந்து ஒரு தெளிவான முரண்தடை நடைமுறைக்கு வந்தது. முரண்தடை, திரு. சந்திரனாலோ அல்லது அவரது பிள்ளைகளான

மேல்முறையீட்டாளர்களாலோ வேறுவகையில் செய்யப்படும் கோரிக்கை எதனையும் நேர்மைநெறியில் நடக்காமல் செய்துவிடும்.

25. அத்தகைய சூழ்நிலைகளில், மேல்முறையீடுகளில் நற்கூறுகள் ஏதுமில்லை என நாங்கள் அறிகிறோம். மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. தரப்பினர்கள் அவரவருக்குரிய செலவுகளை ஏற்கவேண்டும்.

மாண்புமிகு நீதியரசர் திரு. கே.எம். ஜோசப்

மாண்புமிகு நீதியரசர் திரு. உறிரிஉழிகேஉஷ் ராய்

புது தில்லி,
25.01.2023.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."